# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 135 | புதன்கிழமை Wednesday | 12.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# போதைப்பொருள் இல்லாத தமிழகம்

## இயக்கத்தை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்து மாணவர்களுடன் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியையும் ஏற்றார்



சென்னை: சென்னை மாநிலக் கல்லூரியில் போதைப்பொருள் இல்லாத தமிழகம் என்ற இயக்கத்தை முதல்வர் விஜய் துவக்கி வைத்தார்; தொடர்ந்து மாணவர்கள் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி எடுத்தனர்

சென்னை மாநிலக் கல்லூரியில் முதல்வர் விஜய் தலைமையில் போதைப் பொருள்கள் இல்லாத தமிழகம்-மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சிக்குவந்தமுதல்வர் விஜய்க்கு போலீசார் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.நிகழ்ச்சியில் முதல்வர் விஜய் போதை பொருள் ஒழிப்பு உறுதிமொழியை வாசித்தார்.

அவரை பின்பற்றி மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். பின்னர் போதைப் பொருள் விழிப்புணர்வு வீடியோ ஒளிபரப்பப்பட்டது.அவர் போதைப்பொருட்கள் புழகத்தை தடுக்க சிறப்பாகபணிசெய்தபோலீஸ் அதிகாரிகள் 15 பேருக்கு பதக்கங்களை வழங்கினார்.

தமிழகம் முழுவதும் போலீசார் பறிமுதல் செய்தபோதைப்பொருட்களை அழிக்கும் நடவடிக்கை முதல்வர் விஜய் முன்னிலையில் துவங்கி வைக்கப்பட்டது. செங்கல்பட்டு,திருநெல்வேலி, கோவை, தஞ்சை ஆகிய பகுதிகளில் போதைப் பொருட்களை அழிக்கும் பணிகளை முதல்வர் விஜய் வீடியோ வாயிலாக பார்த்தார்.

பின்னர் 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு' என்ற பெயரில் இயக்கத்தை முதல்-அமைச்சர்விஜய்துவக்கி வைத்து மாணவர்களுடன் உறுதிமொழி ஏற்றுக்கொண்டார். 'நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன் ... போதைப்பொருள் ஒழிப்பிற்கு எனது பங்களிப்பை முழுமையாக தருவேன்..' என மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்

தொடர்ந்து மதுவிலக்கு பிரிவில் சிறப்பாக பணியாற்றிய போலீசாருக்கு முதல்-அமைச்சர் விஜய் விருதுகளை வழங்கி சிறப்பித்தார். மேலும் போதைப்பொருள் தடுப்பு மன்றங்களில் சிறந்து விளங்கிய பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகளை முதல்-அமைச்சர் வழங்கினார்.







# நீட் தேர்வுக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்



சென்னை: நீட் நுழைவுத்தேர்வு முறையை ரத்து செய்யக்கோரி சட்டப்பேரவையில் தமிழக அரசு கொண்டு வந்த தனித் தீர்மானம் நிறைவேறியது. இந்தத் தீர்மானத்துக்குபாஜகஉறுப்பினர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று மருத்துவத் துறை அமைச்சர் அருண்ராஜ், நீட் தேர்வு முறைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்தார். இதற்கு திமுக, அதிமுக, பாமக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்த நிலையில், பாஜக எம்எல்ஏ ஒருவர் மட்டும் வெளிநடப்பு செய்தார்.

அதன்பின் அமைச்சர் அருண்ராஜ் கூறுகையில், "மருத்துவக் கல்வி என்பது வெறும் தொழில்முறை கல்வி மட்டுமல்ல;

அது மனித உயிர்களை காப்பாற்றும் உன்னத பணிக்கான கல்வி. அந்த கல்விக்கான வாய்ப்பு பொருளாதார வசதி உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல், திறமையும்,அர்ப்பணிப்பும்கொண்டஒவ்வொருவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்பதே தமிழக அரசின் நிலைப்பாடு.

தமிழகம் பல்லாண்டு காலமாக சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டகல்விக்கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய மாநிலம். 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை வழங்கப்பட்ட காலத்தில் கிராமப்புற மாணவர்கள்,

ஏழை எளிய மாணவர்கள், முதல் தலைமுறை பட்டதாரிகள், சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோருக்கு மருத்துவக் கல்வியில் குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் கிடைத்தன.

அந்தக் கொள்கையின் பலனாகவே இன்று இந்தியாவில் சிறந்த பொதுச் சுகாதார கட்டமைப்பை கொண்ட மாநிலங்களில் தமிழகம் முன்னணியில் உள்ளது.

நீட் தேர்வால் தனியார் பயிற்சி மையங்கள் தான் பலனடைகின்றன. பல குடும்பங்கள் நீட் பயிற்சிக்காக பெரும் தொகையை செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. பொருளாதார, பணம் பொருந்திய மாணவர்களுக்கு இது கூடுதல் வாய்ப்பை வழங்குகிறது. அதே சமயம் கிராமப்புற, அரசுப் பள்ளி மாணவர்கள், தினக்கூலி தொழிலாளி, விவசாயின் குழந்தைகள் அதே அளவிலான பயிற்சியை பெற முடியுமா என்பது தான் தமிழகம் எழுப்பும் அடிப்படைக் கேள்வி.

நீட் தேர்வு முறையானது சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கு பதிலாகஅவற்றை மேலும் அதிகரித்துள்ளது. இந்த அரசு எந்த மாணவரின் கனவையும் பறிக்க விரும்பவில்லை. மாறாக, திறமையுள்ள ஒவ்வொரு மாணவரின் கனவும், அவர்களின் குடும்ப பொருளாதார பின்னணி காரணமாக தடைப்படக்கூடாது என போராடுகிறது.

மாணவர்களின் பனிரெண்டு ஆண்டு கால கல்வியை புறந்தள்ளி; ஒரு நாள் நுழைவுத் தேர்வு மாணவர்களின் உயர்கல்வியை தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நீட் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு வருவதுதான்" என்றார்.

இதையடுத்து, நீட் தேர்விலிருந்து விலக்கு கோரிய தனித்தீர்மானம் பேரவையில் நிறைவேறியது.

# "தவெக ஆட்சியில் கடன் சுமை ரூ.20 லட்சம் கோடியாக உயரும்"

## சட்டபேரவையில் எடப்பாடி பழனிசாமி பேச்சு



சென்னை: "தவெக ஆட்சி பொறுப்பேற்ற 3 மாதத்தில் ரூ.20,000 கோடிக்கு மேல் கடன் வாங்கி உள்ளது. இதே நிலை தொடர்ந்தால் இந்த ஆட்சி முடியும்போது ரூ.10 லட்சம் கோடி கடன் என்பது ரூ.20 லட்சம் கோடியாக உயரும் என்பதில் சந்தேகம் இல்லை" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார். எடப்பாடி பழனிசாமி பேசுகையில், "ஓர் அரசின் ஆட்சி அமைந்ததும் முதல் 100 நாட்கள் முக்கியமானவை. அப்போதுதான் ஓர் அரசின் கொள்கைகள், நோக்கங்கள் தெளிவாக்கப்பட்டு, அரசின் புதிய முயற்சிகள், அதை அடைய தீர்மானிக்கும் பாதை என எல்லாம் தீர்மானிக்கப்படும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் முதலீடுகளும் ஈர்க்கப்படும்.

அதிமுக ஆட்சியிலும், திமுக ஆட்சியிலும் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. தமிழகத்தின் கடன் சுமை ரூ.13 லட்சம் கோடியாக உள்ளது. வரலாறு காணாத அளவில் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் வட்டி சுமை அதிகமாகிவிட்டது.

பட்ஜெட்டில் நிதி மேலாண்மையை சரிசெய்யும் திட்டங்கள் இல்லை. தவெக ஆட்சி பொறுப்பேற்ற 3 மாதத்தில் ரூ.20,000 கோடிக்கு மேல் கடன் வாங்கி உள்ளது. இதே நிலை தொடர்ந்தால் இந்த ஆட்சி முடியும்போது ரூ.10 லட்சம் கோடி கடன் என்பது ரூ.20 லட்சம் கோடியாக உயரும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல திட்டங்களுக்கு 'வெற்றி' என்ற அடைமொழியை கொடுத்துள்ளீர்கள். இதனால் மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. திட்டங்களின் பெயரை மாற்றினால் மக்களுக்கு குழப்பம்தான் ஏற்படும்.

மாற்றம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த நீங்கள், மக்கள் பிரச்சினையை தீர்க்க புதிய யோசனை கூடவா உங்களிடம் தென்படவில்லை. புதிய அரசு பொறுப்பேற்ற உடன் 100 நாள் திட்டத்தை வெளியிடுவது வழக்கம். ஆனால், பட்ஜெட்டில் அரசின் செலவுகளை குறைக்கும் அறிவிப்பு இல்லை. மக்களின் கவனத்தை ஈர்க்கும் கவர்ச்சி வார்த்தைகளே உள்ளன. பேசாமலேயே செயல்படுவேன் என்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் சிலசமயங்களில் பேசினால்தான் தீர்வு கிடைக்கும். இனிமேல் பேசி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் பயிற்சியும், வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். காலிப் பணியிடங்களை அரசு நிரப்ப வேண்டும்.

அதிமுக ஆட்சியில் புதியபேருந்துகள்வாங்கி இயக்கப்பட்டது. ஆனால், அந்தப் பேருந்துகள் தற்போதும் இயக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 20,000 பேருந்துகள் இயக்கப்படுகிறது. அனைத்து அரசு பேருந்திலும் ஏசி வசதி என்பது சாத்தியமில்லாதது.

மக்களுக்கு ஏசி பேருந்து தேவையில்லை. சாதாரண பேருந்தை மாற்றிக் கொடுத்தாலே மக்கள் பாராட்டுவார்கள். ஆனால், இந்த ஆண்டு 1000 பேருந்துகள் வாங்குவோம் என்று சொல்லியுள்ளீர்கள். இந்த ஆண்டு முடிந்துவிட்டது. 4 ஆண்டுகளில் எத்தனை பேருந்துகள் வாங்கப் போகிறீர்கள்? இது இயலாத காரியம். விவசாயிகள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். உழவன் செயலி திட்டத்தை செயல்படுத்த வேண்டும். சீமை கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பழனிசாமி பேசினார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடு-



நிலைப் பள்ளியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. தேவகோட்டை நகர் காவல் நிலைய சார்பு காவல் ஆய்வாளர்கள் அகிலன் மார்டின் மற்றும் அஸ்லாம் ஷேர்கான் ஆகியோர் முன்னிலையில் மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமை வகித்தார். மாணவி ரித்திகா வரவேற்றார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு காவல் சார்பு ஆய்வாளர்கள் பரிசுகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில் பேசிய சார்பு காவல் ஆய்வாளர் அகிலன் மார்டின், போதைப் பொருட்கள் மனிதனின் உடல் மற்றும் மனநலத்தைப் பாதிப்பதுடன், குடும்பத்தையும் சமூகத்தையும் பாதிக்கும். மாணவர்கள் போதைப் பொருட்களைத் தவிர்த்து,

அவற்றின் தீமைகள் குறித்து மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார். மேலும், பள்ளி மாணவர்கள் இருசக்கர வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், சமூக வலைதளங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், மாணவர்கள் நல்ல தொடுதல், தவறான தொடுதல் குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும், போதைப் பொருட்கள் தொடர்பான தகவல் தெரிந்தால் உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டது.

ஆசிரியை முத்துலெட்சுமி நன்றி கூறினார்.



முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றதை ஆயக்குடி ஜே.பி பொறியியல் கல்லூரி கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங், , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.அசோக்குமார் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மா.வீராசாமி , சார் ஆட்சியர் தென்காசி வைஷ்ணவி பால் ஆகியோர் மாணாக்கர்களுடன் சேர்ந்து காணொலி வாயிலாக பார்வையிட்டனர்.

# ஆலங்குளம் அருகே ஸ்ரீ மாட்டுடையார் சாஸ்தா திருக்கோவில் கொடை விழா

## ஒன்றிய சேர்மன் எம். திவ்யா மணிகண்டன் பங்கேற்பு



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே வெங்கடேஸ்வரபுரம் (எ) ரெட்டியார்பட்டியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாட்டுடையார் சாஸ்தா திருக்கோவில் கொடை விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் ஆலங்குளம் ஒன்றிய சேர்மன் எம். திவ்யா மணிகண்டன் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார்.

அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடக்கு காவலக்குறிச்சி பஞ்சாயத்து தலைவர் பாலசுப்பிரமணியன், கீழக்கலங்கல் பஞ்சாயத்து தலைவர் சந்திரசேகர், காவலக்குறிச்சி பஞ்சாயத்து துணைத் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவையொட்டி கோவில் வளாகத்தில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# தமிழகத்துக்கு தினமும் ஒரு டிம்சி தண்ணீர் திறக்க காவிரி ஒழுங்காற்று குழு பரிந்துரை

காவிரியில் தினமும் 1 டிஎம்சி வீதம் 15 நாட்களுக்கு நீர் திறக்க காவிரி ஒழுங்காற்றுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 15-ந்தேதி நடந்த காவிரி ஒழுங்காற்றுக்குழு கூட்டத்தில், தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கவே முடியாது என கர்நாடகம்



மறுத்தது.இதனைத்தொடர்ந்துநடத்தப்பட்டஆணைய கூட்டம், அதன்பிறகு நடந்த ஒழுங்காற்றுக்குழு கூட்டம் ஆகியவற்றிலும் இதனையே கூறியது.

பின்னர்நடைபெற்றஆணைய கூட்டத்தில்ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தார், ஒழுங்காற்றுக்குழு பரிந்துரைத்த4.5டி.எம்.சி.தண்ணீரைதமிழ்நாட்டுக்கு வழங்கியே ஆக வேண்டும் என உத்தரவிட்டார். ஆனால் இதுவும் முறையாக பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

இந்த சூழலில் காவிரி ஒழுங்காற்றுக்குழு இன்று (செவ்வாய்க்கிழமை) கூடியது. இந்த கூட்டத்தில் நீரியல் புள்ளி விவரங்களை ஒழுங்காற்றுக்குழு சேகரித்து, உரிய பரிந்துரைகளை கர்நாடகத்துக்கு அளிக்கும் என தகவல் வெளியாகி இருந்தது.

தமிழ்நாடு அரசு இந்நிலையில் காவிரியில் இருந்து தினமும் 1 டிஎம்சி வீதம் 15 நாட்களுக்கு நீர் திறக்க காவிரி ஒழுங்காற்றுக்குழுபரிந்துரைசெய்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்டு மாதம் தமிழ்நாட்டிற்கு திறக்க வேண்டிய 45 டிஎம்சி நீரை திறந்து விட தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் ஏற்கனவே கர்நாடகா நிலுவையில் வைத்துள்ள 33 டிஎம்சி நீரையும் திறக்க தமிழ்நாடு அரசு வலியுறுத்தி உள்ளது. ஆகஸ்டு 12ம் தேதி காலை 8 மணி முதல் 15 நாட்களுக்கு, பிலிகுண்டுலுவில் 12,000 கன அடி நீர் வருவதை உறுதி செய்ய வேண்டும் என்று காவிரி ஒழுங்காற்றுக் குழு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்ட 3,500 கன அடி நீர் திறக்கப்படாத நிலையில் மீண்டும் தண்ணீர் திறக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



ஆயக்குடி ஜே.பி பொறியியல் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்ற "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் போதைப் பழக்கத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து மாணவர்களின் ஊமை நடிப்புகலை (MIME) விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

# சங்கரன்கோவில் கோமதி அம்பாள் மெட்ரிக் பள்ளியில் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் மெட்ரிக் பள்ளியில் மாவட்ட அளவிலான குழந்தைகளுக்கான சதுரங்கப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் தென்காசி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

போட்டிகள் மாணவர்களின் வயது மற்றும் பிரிவுகளின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

போட்டியை கோமதி அம்பாள் மெட்ரிக் பள்ளியின் முதல்வர் பழனிசெல்வம் தொடங்கி வைத்தார்.


தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளில் மாணவர்கள் தங்களது சதுரங்கத் திறமையை வெளிப்படுத்தினர்.

போட்டிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் கோமதி அம்பாள் மெட்ரிக் பள்ளி முதல்வர் பழனிசெல்வம், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரும், தென்காசி மாவட்ட சதுரங்கக் கழக செயலாளருமான சுவாமிதாஸ், ஆரோன் செஸ் அகாடமி நிறுவனர் திருமலைகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.

இப்போட்டிக்கு முதன்மை நடுவராக மேக்னஸ் செஸ் அகாடமியைச் சேர்ந்த அருண் சிறப்பாக செயல்பட்டு போட்டிகளை திறம்பட நடத்தினார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை சங்கரன்கோவில் ஹிமாலயா பைனான்ஸ் உரிமையாளர் குமார் சிறப்பாக செய்திருந்தார். போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஏற்பாட்டாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

# எப்.சி.ஆர்.ஏ. மசோதா; பாஜக ஆதரவு இல்லை



தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.இந்தநிலையில், தமிழகசட்டசபையில்,வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை திருத்த மசோதாவுக்கு எதிரான தீர்மானத்தை அமைச்சர் ராஜ்மோகன் முன்மொழிந்தார். மத்திய அரசு கொண்டுவரும் எப்.சி. ஆர்.ஏ திருத்தங்கள் வெளிநாட்டு நிதியைத்தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்து, அறக்கட்டளைகளை முறையாக நிர்வகிக்கவே உதவுகிறது. சமூக நலத் திட்டங்களுக்காகப் பெறப்படும் நிதி சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் திருத்தங்கள் மிகவும் அவசியமானது.எனவே மாநில அரசு கொண்டுவரும் இத்தீர்மானத்திற்கு ஆதரவு இல்லை. தவறாக பயன்படுத்த கூடாது என்பதற்காக எப்.சி.ஆர்.ஏ மசோதாவில் சில திருத்தங்களை தான் மத்திய அரசு செய்கிறது. அறக்கட்டளை சரியாக நிர்வகிக்க வேண்டும். சமூக திட்டங்களுக்கு பெறும் நிதி சரியாக பயன்படுத்த வேண்டும் என்று தான் மத்திய அரசு கொண்டு வருகிறது. இந்த திருத்தம் அவசியம் என்று தான் பா.ஜ.க நினைக்கிறது. மாநில அரசுகொண்டுவரும்தீர்மானத்திற்குஆதரவுஇல்லை என மசோதாவுக்கு எதிரான தமிழக அரசின் தனி தீர்மானத்தின் மீது பாஜக எம்.எல்.ஏ போஜராஜன் கூறினார்.

# மதுராந்தகம் அருகே பெரும்பேர் கண்டிகை ஊராட்சியில் உலக பழங்குடியினர் தின விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள பெரும்பேர் கண்டிகை கிராமத்தில் உலக பழங்குடியினர் தின விழா கொண்டாடப்பட்டது இவ் விழாவில் மாநில தலைவர் ஆறுமுகம் காணி மாநில பொதுச் செயலாளர் வெங்கடேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்

பழங்குடியினர் மக்கள் அவர்கள் கலாச்சார ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகளுடன் நடைப்பெற்றது மேலும் கொரோனா காலத்தில் சிறப்பாக செயல்பட்டு ஆதிவாசி மக்களுக்கு உதவிகள் வழங்கியவர்களுக்குகௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டது

இக் கூட்டத்தில் தமிழக ஆதிவாசிகளின் வளர்ச்சி கூட்டமைப்பு சார்பில்

தமிழகஅரசுக்கு24 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானமாக ஏற்றினர் இதில் ஐநாசபை வலியுறுத்தலின்படி ஆகஸ்ட் 9ஆம் தேதி உலக ஆதிவாசிகள் தினமாகஅரசுபொது விடுமுறை அளித்து கொண்டாட வேண்டும் தமிழகத்தில் சுமார் 8 லட்சம் பழங்குடி மக்கள் வசிக்கிறார்கள் இவர்களின் அரசியல் பங்களிப்பாக இரண்டு நாடாளுமன்ற தனி தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும்

தமிழகத்தில்கல்வி வேலைவாய்ப்பில் 1% சதவீதம் தான் உள்ளது அதனைப் 10% சதவீதமாக உயர்த்த வேண்டும்

அதுபோல அரசு பணியிடங்களில் இன்னும் நிரப்பப்படாமல் உள்ள பழங்குடியினருக்கான பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 24 அம்ச கோரிக்கைகளைஅரசுக்குவலியுறுத்தினர்

## சென்னை மயிலாப்பூரில் சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் சார்பாக நடைபெற்ற விழாவில்,

# கௌரவ முனைவர் பட்டம் பெற்ற கோவை கராத்தே பயிற்சியாளர் யோக சுந்தரத்திற்கு கோவை ரயில் நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது



கோவையை சேர்ந்தவர் டாக்டர் டி யோகசுந்தரம் இவர், மலேசியா6வது,டான்ப்ளாக் பெல்ட் தேசிய நடுவராகவும், உலக சிலம்ப விளையாட்டு சங்கத்தின் சிலம்ப ஆசானாகவும் இருந்து வருகிறார் மேலும் கோவையில், யோகாஸ் மார்சியல் ஆர்ட்ஸ் அகாடமி என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, குழந்தைகளுக்கும்,பள்ளி,மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்குமு சிறப்பாக சிலம்பம், மற்றும் யோகா பயிற்சிகளை வழங்கி வருகிறார்.கடந்த 30 வருடமாக கராத்தே பயிற்சியில் ஈடுபட்டுள்ள இவர், சுமார், 500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பயிற்சி அளித்துள்ளார். கடந்த 20 வருடமாக இவரது அகாடமியில் பயிற்சிக்கு வரும் மாணவர்களுக்கு கராத்தே, மற்றும் சிலம்பம் உள்ளிட்ட கலைகளை நுணுக்கமாக பயிற்சியளித்து வருகிறார். மேலும்அரசுப்பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கும், ஏழை எளிய பெற்றோர்களின் குழந்தைகளுக்கும் மிகவும் குறைந்த கட்டணத்தில் பயிற்சி அளித்து, மாவட்டம், மாநிலம், மற்றும் தேசிய அளவிலான கராத்தே, மற்றும் சிலம்பம் போட்டியில் பங்கேற்கவைத்து பல்வேறு பரிசுகளையும் பெற வழிவகை செய்துள்ளார். மேலும் இவரது மாணவ, மாணவிகள் பலரும், கல்லூரிகளில் ஸ்போர்ட்ஸ் கோட்டா பிரிவில் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர்.

இவரது பயிற்சி மையத்தில் கராத்தே பயிற்சி மேற்கொள்ளும் மாணவர்கள் தொடர்ந்து 2:30 மணி நேரம் கராத்தே போட்டிகளில், கட்டா பயிற்சி செய்தும், சிலம்ப மாணவர்கள் தொடர்ந்து 5 மணி நேரம் 15 நிமிடம் சிலம்பம் சுற்றியும் நோபல் உலகசாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளனர். இந்த நிலையில் இவரது சேவையா பாராட்டும் விதமாக, சென்னை மயிலாப்பூரில் உள்ள தனியார் அரங்கில், சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் சார்பாக, நடைபெற்ற நிகழ்ச்சியில் கௌரவ முனைவர் பட்ட விழா இவருக்கு வழங்கி பெருமை படுத்தி உள்ளது. இவருக்கு முனைவர் பட்டத்தை, திரைப்பட நடிகை அம்பிகாவும், க்ராண்ட் மாஸ்டர் இவருக்கு கராத்தே வாழ்நாள் சாதனையாளர் விருதையும் வழங்கினார். விருதை பெற்ற யோகசுந்தரம் இன்று ரயில் மார்க்கமாக கோவை வந்தடைந்தார் அவர்க்கு கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கபட்டது.

## பழவூர் நூலகத்தில் ஐம்பெரும் விழா, நூலக தந்தை எஸ்.ஆர்அ.ரங்கநாதன் 134வது பிறந்தநாள் விழா



நெல்லை மாவட்டம் பழவூர் நூலகத்தில் ஐம்பெரும் விழா மற்றும் நூலக தந்தை எஸ்.ஆர். அரங்கநாதனின் 134-வது பிறந்தநாள் விழா நூலகர் தினம் புரவலர் சேர்க்கை டாக்டர் எஸ். ஆர்.அரங்கநாதன் விருது வழங்குதல்,ஓவியம்,கட்டுரை, கதை சொல்லுதல், பேச்சு போட்டிகளுக்கு பரிசு வழங்குதல் என ஐம்பெருவிழா அறம் வாசகர்வட்டஆலோசகரும்,நூலக கொடையாளருமாகிய சிவதாணு தலைமையில்,அறம் வாசகர் வட்ட தலைவர் மாதவதாஸ் முன்னிலையில் நடந்தது. நூலக அறம் வாசகர் வட்ட ஆலோசகர் கல்பனாதெய்வநாயகம்வரவேற்றார். பழவூர் ஊராட்சி மன்ற தலைவர்சுப்புலெட்சுமி குமார் குத்து விளக்கேற்றினார்.

நூலககொடையாளரும்,அறம் வாசகர் வட்ட கௌரவ ஆலோசகர் பழவூர் இசக்கியப்பன், டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களின் படத்திற்கு மாலைஅணிவித்துமரியாதைசெலுத்தினார்.

பழவூர் ஊராட்சி மன்ற தலைவர்சுப்புலெட்சுமி குமார் ரூபாய் 5000 வழங்கி பெரும் புரவலராகவும், ஊராட்சி மன்ற செயலர் ராமலெட்சுமி வைகுண்டம், ஆரல்வாய்மொழி நவமணி முத்துராணி தம்பதியர் பெயரில் தமிழ்நாடு காவல்துறை தலைமைக்காவலர் முத்துக்குமார் தலா ரூபாய்1000 வழங்கி நூலக புரவலர்களாக இணைந்தனர். புதிய புரவலர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது. வடக்கன்குளம் நூலகர்ராஜ்குமாருக்கு டாக்டர் எஸ் ஆர் அரங்கநாதன் விருது வழங்கப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குபரிசுகளும்,சான்றிதழும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டார நூலகர்கள் ராஜ்குமார், புஷ்பகலாரதி, அனுஷியா, சபிதா, அஜிதா,சோபா,உமாபார்வதி,செயற்குழு உறுப்பினர்கள்,தீபா, கலைவாணி ஆகியோர் வாழ்த்தி பேசினர்,நல்நூலகர் திருக்குமரன் நன்றி கூறினார்.

## வள்ளியூரில் தே.மு.தி.க. மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்

### மாவட்ட செயலாளர் விஜி வேலாயுதம் தலைமையில் நடந்தது



திருநெல்வேலி புறநகர் மாவட்ட தேமுதிக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

வள்ளியூர் எம். எஸ். மஹால் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் விஜி வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆகஸ்ட் 25 கேப்டன் அவர்களின் பிறந்தநாளை வறுமை ஒழிப்புதினமாககொண்டாடுவதுபொது மக்களுக்கு நலத்திட்ட உதவி அன்னதானம் வழங்குவது செப்டம்பர் 14தேமுதிக 22 ஆம் ஆண்டு துவக்க விழா பொதுக்கூட்டம் நடத்துவது நலத்திட்ட உதவி வழங்குவது டிசம்பர் 24 கேப்டன்

அவர்களின் மூன்றாம் ஆண்டு குருபூஜை விழாவில் கழக நிர்வாகிகள் திரளாககலந்துகொண்டு மரியாதை செலுத்துவது மேலும் நடிகர் சங்க கட்டிடத்திற்கு கேப்டன் பெயர் சூட்ட வேண்டும்என நடிகர் சங்க தலைவர் செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு கோரிக்கை மனு அனுப்புவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இக்கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் யோசேப்பு, தலைமை செயற்குழு உறுப்பினர் மாரியப்பன். பொதுக்குழு உறுப்பினர் சங்கர்,ஒன்றிய கழகச் செயலாளர்கள் வள்ளியூர் தெற்கு வெள்ளத்துரை, ராதாபுரம் கிழக்கு இசக்கிமுத்து. நாங்குநேரி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் தினகரன், மாவட்ட இளைஞரணி செயலாளர் வசந்த ராஜா, துணை செயலாளர் செந்தில்குமார், மாவட்ட கேப்டன் மன்ற துணைச் செயலாளர் தர்மர்,தானு வ மூர்த்தி,மாவட்ட வர்த்தக அணி செயலாளர் வின்சென்ட் துணைச் செயலாளர் சுயம்பு ராஜ், மாவட்ட மகளிர் அணி துணைச்செயலாளர்கள் அதிசய வெனிஸ், வசந்தா, வள்ளியூர் ஒன்றிய மகளிர் அணி செயலாளர் சுமித்ரா, வள்ளியூர் பேரூர் கழக அவை தலைவர் கனகராஜ், துணைச்செயலாளர்கள் முருகன்,சிதம்பர பாஸ்கர்,ஏர்வாடி பேரூர் கழகச் செயலாளர் மீரான், திசையன்விளை பேரூர் கழகச்செயலாளர் ராஜகுமார், நிர்வாகிகள் அன்பழகன், பாஸ்கர், அவரைக் குளம் துறை கேப்டன் மன்ற நிர்வாகிகள் நெல்லை ஆறுமுகம் மற்றும் ஏராளமானகழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசியில், வாய்க்கால்பாலம் முதல் குத்துக்கல்வலசை பகுதி வரை உள்ள நெடுஞ்சாலையை வரைப்படத்தின் அடிப்படையில் விரிவுபடுத்த கோரி வெற்றிலை பாக்கு பழங்களுடன் மாவட்ட ஆட்சியிடம் மனு வழங்க வந்த இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர்தாம்பூலத்துடன்மனுகொடுக்கவந்ததால்போலீசார்உள்ளேஅனுமதிக்காததால் பரபரப்பு

## ஆலங்குளம் அருகே ஸ்ரீ மாட்டுடையார் சாஸ்தா திருக்கோவில் கொடை விழா

### முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் சாமி தரிசனம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே வெங்கடேஸ்வரபுரம் (எ) ரெட்டியார்பட்டியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாட்டுடையார் சாஸ்தா திருக்கோவில் கொடை விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்.

அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி அன்பழகன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஐய்யம் பெருமாள், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், நாராயணன், காவலாகுறிச்சி அந்தோணி,தட்டப்பாறை கணபதி, பாலகுமரன் , அரசு மருத்துவமனை முகோஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூரில் உள்ள சிஎஸ் அகாடமியில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த செல்வன். பிரணவ் இளங்கோ, அமெரிக்காவின் ஐவி லீக் கல்வி நிறுவனமான பிரவுன் பல்கலைக்கழகத்தில்ரூ.3.55கோடிகல்விஉதவித்தொகையுடன்சேர்க்கைபெற்றுள்ளதை மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி(10.08.2026)அன்றுபாராட்டிபுத்தகம்வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் கோபிசெட்டிபாளையம் நகராட்சி சுகாதார அலுவலர் ரா. ரவிச்சந்திரன் அவர்கள் சிறப்பாக பணியாற்றியமைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி (10.08.2026) அன்று மாதம் ஒரு மாமனிதர் பாராட்டுச்சான்றிதழை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

## நல்லூரில் அருகே கிராம மக்கள் மற்றும் அனைத்துக் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

கடலூர் மாவட்டம் நல்லூர் நான்கு முனை சந்திப்பில்,அருகேரிகிராமபொதுமக்கள்மற்றும் அனைத்துக் கட்சியினர் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஆகஸ்ட் 11 நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அருகேரி கிராமத்தில் நிலவி வரும் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஊராட்சி



நிர்வாகமும் உள்ளாட்சித் துறையும் உடனடியாகத் தீர்வு காண வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 2021 ஆண்டு இடிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக் கட்டிடத்தை மீண்டும் விரைவாகக் கட்டித் தர வேண்டும் என்றும், ஆதிதிராவிடர் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டும் என்றும் போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.

மேலும், இடிக்கப்பட்ட ஊராட்சி மன்றக் கட்டிடத்திற்குப் பதிலாக புதிய கட்டிடம் கட்ட வேண்டும், புதிய காலனியில் பழுது நீக்கப்பட்ட சுகாதார வளாகத்தை உடனடியாகப் பயன்பாட்டிற்குத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்படும் நீர் கசிவைச் சீரமைப்பதுடன், 30 ஆண்டுகள் பழமையான அபாயகரமான நீர்த்தேக்கத் தொட்டியை இடித்துவிட்டுபுதியதொட்டிஅமைக்கவேண்டும் எனப் போராட்டக்காரர்கள் கோரினர்.

ஆதிதிராவிடர் காலனியில் கடந்த நான்கு ஆண்டுகளாகச் சாய்ந்த நிலையில் உள்ள மின்கம்பத்தைச் சீரமைக்க மின்சாரத் துறை நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும்,கிராமக் கோரிக்கைகளை நிறைவேற்றாத ஊராட்சிச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். முருகேசன், மோகன், கருப்புசாமி, சீனிவாசன், தினகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுப்பிரமணியன், முருகையன், கடவுள் என்ற கோவிந்தராசு, செந்தமிழன், கலியபெருமாள், வேல்முருகன், அன்பரசன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். இப்போராட்டத்தில் சுரேஷ்பாபு, விஜயபாரதி, குரு, செல்வம், கண்ணாயிரம், கண்ணணன், கென்னடி, சக்திவேல் உள்ளிட்ட கிராம முக்கியஸ்தர்கள், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

## ஈரோடு, பெருந்துறை, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடிக்கு 14 ந் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் முகாம்



ஈரோடு மாவட்டம், ஈரோடு கோட்டம், ஈரோடு, பெருந்துறை, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களுக்குஎதிர்வரும்14.08.2026(வெள்ளிகிழமை) அன்று காலை 11.00 மணிக்கு ஈரோடு வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில்வருவாய்கோட்டாட்சியர் தலைமையில் "விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் முகாம்" நடைபெறவுள்ளது. மேற்படி முகாமில் விவசாயம் சார்ந்த கோரிக்கை மனுக்களுக்கு மட்டுமே தீர்வு காணும் பொருட்டு முகாம் நடைபெறவுள்ளது என்பதையும், மேற்படி முகாமில் விவசாயிகள் கலந்து கொள்ளுமாறும் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.





1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE

The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் புத்தகத் திருவிழா நிறைவு நாள்




ஈரோடு மாவட்டம், வீரப்பன்சத்திரம், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தி வரும் 22-வது ஈரோடு புத்தகத் திருவிழா நிறைவு நாள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (11.08.2026) செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு புத்தக வாசிப்பை மாணவர்களின் மற்றும் இளைஞர்களிடம் பெரிய அளவில் கொண்டு செல்லும் நோக்கில் பல்வேறு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாக, 519 இடங்களில் 2.06 இலட்சம் பேர் ஒரே நேரத்தில் 22 நிமிடங்கள் புத்தகம் வாசித்த நிகழ்வு உலக சாதனையாக எலைட்புக்ஆப்ரெகாட்ஸ் (Elite Book of Records) நிறுவனத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சாதனைச் சான்றிதழ் புத்தகத் திருவிழா தொடக்க விழாவில் பள்ளிக்கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் அமைச்சர் ராஜ்மோகன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் பாராட்டுக்களை தெரிவித்தனர். இவ்வுலக சாதனை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள், அரசு அலுவலர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் தங்களது நிகழ்வாகக் கருதி பங்கேற்றதன் காரணமாக வெற்றியடைந்தது.

புத்தகத் திருவிழாவின் 12 நாட்களிலும் ஒவ்வொரு நாளும் சிறப்பு சிந்தனை அரங்குகள் நடத்தப்பட்டு, எழுத்தாளர்கள், அறிஞர்கள், அறிவியலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆளுமைகள் பங்கேற்றனர்.

மேலும், சுமார் 80 புதிய புத்தகங்கள் இப்புத்தகத் திருவிழாவில் வெளியிடப்பட்டுள்ளன. புத்தகத் திருவிழாவிற்காகவே 500-க்கும் மேற்பட்ட புதிய புத்தகங்கள் பதிப்பாளர்களால் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பெருமளவில் புத்தகத் திருவிழாவிற்கு வருகை தந்து, புத்தகங்களை ஆர்வத்துடன் வாங்கி வருகின்றனர். இது மாணவர்களிடையே வாசிப்பு பழக்கம் வளர்ந்து வருவதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும், மக்கள் சிந்தனைப் பேரவை, பல்வேறு அமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் "புத்தக அலமாரி திட்டம்" செயல்படுத்தப்பட்டு, சுமார் 60 பள்ளிகளுக்கு தலா ரூ.15,000 மதிப்பிலான புத்தக அலமாரி மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. புத்தகத் திருவிழாவில் சிங்கப்பூரிலிருந்து 25-க்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்கள் ஈரோட்டிற்கு வருகைதந்து புத்தகத் திருவிழாவை பார்வையிட்டு, பொதுமக்களின் வாசிப்பு ஆர்வத்தை பாராட்டினர். மேலும், ஒவ்வொரு நாளும் கதை அரங்கம், பேச்சரங்கம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அறிவு, சிந்தனை மற்றும் வாசிப்பு பழக்கத்தை வளர்க்கும் வகையில் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த புத்தகத் திருவிழாவின் வெற்றிக்குநூற்றுக்கணக்கான கல்லூரி மாணவர்கள் தன்னார்வலர்களாக இணைந்து சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

இந்த புத்தகத் திருவிழாவானது, மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடம் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி, உயர்ந்த சிந்தனை மற்றும் நல்லெண்ணத்தை வளர்க்கும் முக்கிய சமூகப் பணியாக அமைந்துள்ளது. வாசிப்பு, அறிவு, சிந்தனை மற்றும் நல்லெண்ணம் போன்ற நேர்மறையான செயல்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். அந்த வகையில், ஈரோடு புத்தகத்திருவிழா மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமா சங்கர் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னையில், "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" உருவாக்கும் பொருட்டு போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, முன்னிலையில் போதைப்பொருள்எதிர்ப்பு உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க, போதைப் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தீமைகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, நேற்றைய தினம் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதி மொழியான, "போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை களை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப்பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன். மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும், போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்கு உள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப்பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்கு துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்" என்ற உறுதிமொழியை தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் வாசிக்க, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் மாணவ, மாணவியர்கள், பேராசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பின் தொடர்ந்து வாசித்து உறுதி மொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.தொடர்ந்து, கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே "போதைப் பொருட்கள் இல்லாததமிழ்நாடு" உருவாக்கும் பொருட்டு போதைப்பொருள்எதிர்ப்பு குறித்து நடத்தப்பட்ட போட்டிகளான பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, தெருக்கூத்து, குறும்படம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி,வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும், போதைப்பொருள் எதிர்ப்பு குறித்து நடத்தப்பட்ட நாடகம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடத்தியமைக்காக மாணவ,மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, போதைப் பொருள் தடுப்பு தொடர்பாக குழந்தைகள் இல்லங்களில் நடத்தப்பட்ட போட்டிகளான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, முழக்கப் போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

கல்லூரி மற்றும் பள்ளி போதைப்பொருள்எதிர்ப்பு மன்றங்கள் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக மாநில அளவில் முதலிடம் பெற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை பெற்றதை பாராட்டி, ஈரோடு கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு செங்கோடம்பாளையம் அரசு உயர் நிலைப்பள்ளி சேர்ந்த கேப்டன் மற்றும் உதவி தலைமையாசிரியை ஏ.ஆர்.கார்த்திக்கேயன் யமுனா தேவி ஆகியோர்களுக்கு புத்தகம் வழங்கி, கௌரவித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின், உதவி ஆணையர் (கலால்) கோகிலா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மரு.வரலட்சுமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.மகேஸ்வரன், அலுவலக மேலாளர் வீரலட்சுமி, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சங்கர சுப்பிரமணியன் உட்பட கல்லூரி மாணவ, மாணவியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை ஸ்ரீ அபிராமி கல்வி குழுமங்களின் 15 வது பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு பாடத்திட்ட வடிவமைப்புக் குழுத் தலைவர், முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, தமிழ்நாடு செவிலியர் மற்றும் மருத்துவச்சி மன்ற பதிவாளர் டாக்டர் சங்கர் சண்முகம் ஆகியோர் பங்கேற்பு



கோவை ஸ்ரீ அபிராமி கல்வி நிறுவனங்களின் 15-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

மருத்துவர்பெரியசாமி தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு பாடத்திட்ட வடிவமைப்புக் குழுத் தலைவர், முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டார். தலைமை விருந்தினராக தமிழ்நாடு செவிலியர் மற்றும் மருத்துவச்சி மன்ற பதிவாளர் டாக்டர் சங்கர் சண்முகம் பங்கேற்றார்.

விழாவில்,ஸ்ரீ அபிராமி கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களான மருத்துவர்கள் குந்தவி தேவி, செந்தில் குமார், பாலமுருகன், உமாதேவி, சுசரிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

விழாவில், அபிராமி கல்வி நிறுவனங்களுகளின் செவிலியர் கல்லூரி,மருந்தியல் கல்லூரி, தொழில் சார் சிகிச்சை கல்லூரி,பிசியோதெரபி, மற்றும் இணை சுகாதார அறிவியல் ஆகிய கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுகலை பயின்ற மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது..

விழாவில் பேசிய, தமிழ்நாடு பாடத்திட்ட வடிவமைப்பு குழுவின் தலைவர் மற்றும் முன்னாள் இஸ்ரோ திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை பேசுகையில் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு குழுவாக இணைந்து பணியாற்றுதல் என்ற கொள்கையை தான் கடைப்பிடித்ததாகவும் வெற்றியை அடைவதற்கு கற்றல் மற்றும் கடின உழைப்பு மிகவும் அவசியம் என தெரிவித்தார் தொழில்முறை வாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் முன்னேறுவதற்கு தொடர்ந்து கற்றுக் கொள்வதும் உழைப்பதும் முக்கியம் என்றும் அவர் அறிவுறுத்தினார்

தொடர்ந்து பேசிய , தமிழ்நாடு செவிலியர் மற்றும் மருத்துவச்சி மன்ற பதிவாளர் டாக்டர் சங்கர் சண்முகம்,தற்போது செவிலியர்துறையில் சர்வதேச அளவில் இந்திய செவிலியர்களின் தேவை அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்..

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்கள்,ரேணுகா,தட்சிணாமூர்த்தி, நரேஷ்பாபு,ஜெயபாரதி,மணிமேகலை உட்பட துறை தலைவர்கள்,பேராசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

# பாக்கெட்டில் யார் படம்? ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் இடையே காராசார விவாதம்



தவெக அரசின் பட்ஜெட்டில் திருப்புகிற பக்கங்கள் எல்லாம் திராவிட மாடல் அரசின் சாதனைகளே ஜொலிக்கின்றது என பேரவையில் திமுக எம்.எல்.ஏ. ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

தமிழக சட்டசபையில் பட்ஜெட், வேளாண் பட்ஜெட் மீதான விவாதம் 3-வது நாளாக இன்று தொடங்கியது. சட்டசபை கூட்டம் தொடங்கியதும் முன்னாள் முதல்-அமைச்சரும் தி.மு.க.

எம்.எல்.ஏ.வுமான ஓ.பன்னீர்செல்வம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக வெற்றிக்கழகம் தலைமையிலான அரசின் நிதிநிலை அறிக்கையானதுஏமாற்றின்வடிவமாகஜொலிக்கும் பட்ஜெட். செய்வதை மட்டும் தான் சொல்வோம் எனக்கூறி அள்ளித்தெளித்த வாக்குறுதிகளை த.வெ.க. அரசு மறந்துவிட்டது. துறை ரீதியான கூட்டம் நடத்தி அமைச்சரவை கூட்டம் நடத்திய பின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.தமிழகவெற்றிக்கழக அரசு தாக்கல் செய்துள்ள நிதி நிலை அறிக்கை பெயர் மாற்றப்பட்டியல் போல் உள்ளது.உரிமைத் தொகை உயரவில்லை, 6 சிலிண்டர் என எந்த அறிவிப்பும் வராததால் மகளிர் ஏமாற்றம். மாணவர்களின் இடைநிற்றலை தவிர்க்க நிதி ஒதுக்கீடு திட்டங்கள் பட்ஜெட்டில் இல்லை. மாநிலம் முழுவதும் அனைத்து அரசு பேருந்திலும் இலவச பயணம் என்ற விடியல் பயண திட்டம் அறிவிக்கப்படவில்லை.

திருப்புகின்ற பக்கமெல்லாம் தி.மு.க. ஆட்சியின் திட்டங்களே பட்ஜெட்டில் உள்ளன. புதிய அரசின் திட்டங்களை தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக்கொண்டே இருக்கிறேன் என்று கூறினார்.

ஓ.பன்னீர்செல்வம் பேச்சுக்கு அமைச்சர் செங்கோட்டையன் பதில் கூறுகையில், 5 ஆண்டுகளுக்குள் சொன்னவற்றை நிறைவேற்றுவோம், ஓ.பன்னீர்செல்வம் சொல்வதை போல் 3 மாதத்தில் செய்து சரித்திரம் படைக்க முடியாது. நீங்கள் இடம் மாறி இருக்குறீர்கள் பரவாயில்லை..அதற்காக இவ்வளவு துதி பாட வேண்டிய அவசியமில்லை. அம்மாவால் 3 முறை முதல்-அமைச்சராக்கப்பட்டஓ.பி.எஸ்பேச்சை பார்த்து நாடே சிரித்து கொண்டிருக்கிறது.

ஓ.பன்னீர்செல்வம் பதில் கூறுகையில், முதலில் இடம் மாறியது செங்கோட்டையன் தான் என்றார்.

மேலும் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கூறுகையில்,

இடத்தை மாற்றியபோது அவரின் இதயத்தின் அருகே வைத்துள்ள நிழல் படத்தை மாற்ற வேண்டாம் என கூறினார் முதல்-அமைச்சர் விஜய். ஜெயலலிதா இருந்த காலத்திலேயே முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வம் யார் படத்தைதற்போது வைத்துள்ளார் என்றார்.

இடமும் மாறியது, படமும் மாறியது - ராஜ்மோகன்

ஓ.பன்னீர்செல்வம் இடத்தை மட்டும் அல்ல இதயத்தையும் மாற்றிவிட்டார் என அமைச்சர் ராஜ்மோகன் பேசினார்.

இதற்கு ஓ.பன்னீர்செல்வம் பதில் கூறுகையில், அண்ணா, ஜெயலலிதா, கலைஞர் என அனைவரும் இதயத்தில் உள்ளனர். படம் வைத்து ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. தற்போது சட்டமன்ற உறுப்பினராக பேரவையில் நான் இருப்பதற்கு காரணம் ஸ்டாலின், எனவே அவர் படத்தை வைத்துள்ளேன்.

திராவிட இயக்கத்தை சுற்றித்தான் என் நிலை இருக்கும்,நான் எப்படிப்பட்டவன் என அனைவருக்கும் 200% தெரியும். பயிர்க்கடன் முழு தள்ளுபடி, பழைய ஓய்வூதிய திட்டம் அறிவிப்பு வரவில்லை.வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கையிலேயே தூங்கி கொண்டிருக்கின்றன.

கடன் வாங்காமல் 50 ஆண்டுகளுக்கு ஆட்சி செய்ய முடியாது என்கிறார் நிதித்துறை செயலாளர். தேர்தல் பிரசாரத்தில் பேசியது தவறு என முதல்-அமை ச்சருக்கு இப்போது தெரிந்திருக்கும் என்றார்.

சட்டசபையில் படம் வைப்பது தொடர்பான நகைச்சுவை பேச்சு சலசலப்பாக மாறியது.

# Three crew members killed in Houthi's at tack on cargo ship in Bab elMandeb Strait



At least three crew members were killed after a deck cargo ship was attacked by Yemen's Iran-aligned Houthis in the Bab el-Mandeb Strait, two sources from the Yemeni coast guard and two military officials in the government said.

The Houthis have not yet claimed the attack, which Yemeni sources said killed two Pakistanis and one Indonesian person on the boat sailing from Salalah in Oman via Djibouti, Reuters reported.

If confirmed, the attack on Tanzania-flagged Tihamah would be the first by a Houthi strike since Middle East conflict was triggered by US-Israeli attacks on Iran at the end of February.

This comes a month after the Houthis declared a naval blockade against Saudi Arabia in the Red Sea in response to what they described as a Saudi siege. Riyadh denies that it had besieged Yemen, according to Reuters.

Why is Bab el-Mandeb important?

Bab al-Mandab or Bab el-Mandeb - known as 'Gate of Tears' over its treacherous sailing conditions has emerged as a key talking point as Strait of Hormuz continues to remain shut.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.